# இயற்கைத் தாயே!

இயற்கைத் தாயே!
எம் இறையே!!
ஏனிந்த கோபம்...

பூமிப் பந்தில்
பூகம்பமாய் வெடித்து
எங்கள் பிரமாண்டங்களை
பிய்த்துப் போட்டாயே...

ஆழிப்பேரலையாய்
ஆர்ப்பரித்து எழுந்து
எங்கள் உடைமைகளை
புரட்டிப் போட்டாயே...

மந்தையாய்
மரித்த உடல்கள்...
மனிதர்களின்
அழுகைத்தேடல்...

ஏனிந்த கொடூரம்

உனது பச்சைப் புடவையாம்
பசுங்காடுகளை அழித்து
உன்னை
மானபங்கப் படுத்தியதாலா

உனது உடலெங்கும்
துளையிட்டு
உயிர் நீரை
உறிஞ்சி எடுத்ததாலா

கனிம வளங்களை
வெட்டி எடுத்து
உன்னை
காயப்படுத்தியதாலா

ஏனிந்த கோபம்

வேண்டாம் தாயே
எம்மை விட்டுவிடு
நாங்கள் வலுவிழந்தவர்கள்

உனது
சீற்றத்திற்கு முன்னால்
எமது அறிவியல்,
சிறு பிள்ளையின்
சிறிய விளையாட்டே...

அ.நெல்சன் கோயில்தாஸ்
உதவி கணக்கு அதிகாரி